(இ) ஊத்தங்கரை வித்யாமந்திர் பள்ளியின் பன்னிரண்டாம் வகுப்பு மாணவன் பாலமுருகன் மறுகூட்டல் மதிப்பெண்ணின்படி முதலாவதாக வருவதாகத் தெரிவித்து அரசின் உதவி கோருதல்

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, Speaker Sir, *முக்கியமான* matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே இரண்டு பிரச்சினைகள் எடுத்தாகிவிட்டன. (குறுக்கீடு)* Different matter-*ரா?*

திரு. சி. ஞானசேகரன்: Different matter *தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சொல்லுங்கள்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இதோ முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *நெய்வேலிப் பிரச்சினை குறித்து ஐந்து நாட்களாகத் தொடர்ந்து தள்ளி வைத்துக்கொண்டே வருகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எடுத்துவிடுவோம். அவர் ஏதோ சின்ன* matter *சொல்ல வேண்டுமென்று சொல்கிறார், சொல்லட்டும்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் வசிக்கக்கூடிய மாணவன் பாலமுருகன், ஊத்தங்கரை வித்யாமந்திர் பள்ளியிலே படித்து, +2 மார்க்கிலே, இப்பொழுது—*re-totaling*—மறுகூட்டலிலே 8 மதிப்பெண்கள் கூடுதலாகப் பெற்று, 1,184 மதிப்பெண்கள் பெற்று, அவன்தான் இப்பொழுது முதல் மாணவனாக வந்திருக்கிறான். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், 1,183 மார்க்குகள் எடுத்த சிலரை, அவர்கள்தான் முதல் மாணவர்கள் என்று அறிவித்து, அதற்கான பரிசு, ஊக்கத்தொகை, லேப்டாப் எல்லாம் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இப்பொழுது மறுகூட்டலிலே 1,184 மதிப்பெண் பெற்றிருக்கிற திருப்பத்தூர் மாணவன் பாலமுருகன் என்பவனை, முதல் மாணவனாக அறிவித்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பரிசு, ஊக்கத்தொகை,* Scholarship, Laptop *மற்றும் எதிர்காலத்தில் மேற்படிப்புப் படிக்கக்கூடிய வாய்ப்பினை, அமைச்சர் அவர்கள் மூலமாக அறிவிக்க*

2009 ஜூலை 2] [திரு. சி. ஞானசேகரன்]

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நாங்கள் rank பட்டியலில் சேர்க்க முடியாது என்று, சட்டமன்றம் நடக்கிறபோது அமைச்சர் சொல்ல வேண்டிய கருத்தை, Director of Examinations வெளியிலே சொல்லுவது என்பது, வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ஆகவே, rank பட்டியலிலே அந்த மாணவனைச் சேர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊத்தங்கரை மாணவன் குறித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அது re-totaling-லே வந்ததா அல்லது re-valuation-லே வந்ததா என்பதைப் பார்க்க வேண்டும். Re-valuation என்று வருகின்றபோது ஒரு paper-ஐத் திருத்துவதிலே மாறுபாடுகள் எப்படியிருக்கும்? அதற்கு முன்னாலே ஒரு ஆசிரியர் ஒருமாதிரி திருத்தியிருக்கலாம். அதே paper-ஐ இன்னொரு ஆசிரியர் ஒருமாதிரி திருத்தியிருக்கலாம். Re-totaling-லே 8 மார்க் பெற்று, அவர் முதல் மாணவனாக வந்திருக்கிறார். அதற்குள்ளே இருக்கக்கூடிய—எது எப்படியிருந்தாலும், அந்த மாணவன் பெற்றிருக்கக்கூடிய மதிப்பெண் 1,184 என்கின்றபோது, அந்த மாணவன் முதல் மாணவனாக வருகிறான். எனவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, நிச்சயமாக அந்த மாணவனுக்குக் கிடைக்க வேண்டிய ஊக்கத் தொகைகள், laptop, பரிசுத் தொகைகள் போன்றவை வழங்கப்படுவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும் என்பதை நான் இந்த அவையிலே உங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

நெய்வேலி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, "நெய்வேலி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து" அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு